# திக்குவல்லை கமாலின் சிறுகதைகளும் தென்னிலங்கை முஸ்லிம் சமூகமும்: ஓர் ஆய்வு

**Faseela M.S.F.[75] & Rameez M.A.M.[76]**

**ஆய்வுச் சுருக்கம்**

தென்னிலங்கை திக்குவல்லையைச் சேர்ந்த முகம்மது கமால் எனும் இயற்பெயருடைய திக்குவல்லை கமால் பல்வேறு சிறுகதைகளை எழுதியுள்ளார். பொதுவாக மனித உணர்வுகளை அப்படியே படம்பிடித்துக் காட்டுகின்ற விடயம் சிறுகதைகளில்தான் சாத்தியமாகும். சமுதாய அக்கறை கொண்ட பல எழுத்தாளர்களும் தம் சமூகம் சார்ந்த அவலங்களை சிறுகதைகளினூடாகவே பெரிதும் வெளிக்காட்டுவர். அந்தவகையில், தான் வாழ்கின்ற சமூகத்தின் மீது மிக்க அக்கறை கொண்ட திக்குவல்லை கமாலின் சிறுகதைகள் அவரது சமூக யதார்த்தங்களை வெளிப்படுத்துகின்றன. சிறுகதையாளர்கள் பலரும் பல்வேறு பரிமாணங்களில் சிறுகதைகள் எழுதுகின்ற போதிலும் அவரவர் பிரதேச மக்களின் பிரச்சினைகளை சிறுகதைகளினூடாக வெளிக்கொண்டுவருவதென்பது அரிதான ஒரு விடயமாகும். முந்நூற்றுக்கும் மேற்பட்ட சிறுகதைகளை எழுதியுள்ள திக்குவல்லை கமாலின் அத்துணை கதைகளிலும் தென்னிலங்கை கிராம முஸ்லிம் சமூக பிரச்சினைகள் சித்திரிக்கப்படுகின்றன. அவற்றினை ஆராய்வதாகவே இவ்வாய்வு அமைகின்றது. திக்குவல்லை கமாலின் சிறுகதைகளில் தென்னிலங்கை முஸ்லிம் சமூக பிரச்சினைகள் எவ்வாறு வெளிக்காட்டப்படுகின்றன என்பதை ஆராய்வதே இவ்வாய்வின் பிரதான நோக்கமாகும். அவ்வாறான பிரச்சினைகளுக்கெதிராக எவ்வாறு குரல் கொடுக்க வேண்டும் என்ற ஆசிரியரின் வேட்கையைப் புரியவைப்பதும் அத்தோடு, தென்னிலங்கை முஸ்லிம் சமூக தனித்துவமான பண்புகளை அடையாளப்படுத்துவதையும் துணைநோக்கங்களாகக் கொண்டுள்ளது. இவ்வாய்வு திக்குவல்லை கமாலின் ஒன்பது சிறுகதைத் தொகுதிகளையும் அவருடனான நேர்காணலையும் முதலாம் நிலைத் தரவாகவும் அவரது சிறுகதைகள் தொடர்பாக வெளிவந்த முன்னைய ஆய்வுகள், கட்டுரைகள், விமர்சனங்கள், முன்னுரைகள் என்பன இரண்டாம் நிலைத்தரவுகளாகவும் கொண்டுள்ளன. தென்னிலங்கை முஸ்லிம்களின் பிரச்சினைகளை வெளிக்கொணர்வதிலும் அம்மக்களின் தனித்துவமான சில பண்புகளை அடையாளப்படுத்துவதிலும் திக்குவல்லை கமாலின் சிறுகதைகளுக்கு கணதியான இடமுண்டு என்பது இவ்வாய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

**பிரதான சொற்கள்:** திக்குவல்லை கமால், சிறுகதைகள், தென்னிலங்கை, முஸ்லிம் சமூக, பிரச்சினைகள்

**ஆய்வு அறிமுகம்**

“மார்க்ஸிய சிந்தனைகளை உள்வாங்கிக் கொண்டவர் கமால். வர்க்கபேதமற்ற சமத்துவ சமுதாயம்தான் அவரது கனவு. அக்கனவு நனவாகின்றதோ இல்லையோ தனது கனவை எழுத்தில் பதித்து மனநிறைவடைகின்றார்” (முருகபூபதி, 2004).என லெ. முருகபூபதி திக்குவல்லை கமாலின் எழுத்துக்கள் பற்றிக் குறிப்பிடுகின்றார். காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை என்பன தென்னிலங்கையின் கரையோர மாவட்டங்கள். அவற்றுள் காலி - ஹம்பாந்தோட்டை என்ற இரு மாவட்டங்களுக்கும் இடைநடுவே அமையப்பெற்றது மாத்தறை மாவட்டம். இம்மாவட்டம் கணிசமான அளவு முஸ்லிம்களைக் கொண்டது. இலங்கைத் தீவின் எல்லாத் திக்குகளிலும் முஸ்லிம்கள் வாழ்கின்றனர். சில பிரதேசங்களில் அவர்களது குடியேற்றங்கள் செறிந்தும் வேறு சில பிரதேசங்களில் பரந்தும் காணப்படுகின்றன.

தென்னிலங்கையில் மாத்தறை நகருக்கு கிழக்கே பன்னிரண்டு மைல் தூரத்தில் அமைந்திருக்கும் கடலோரக் கிராமம் திக்குவல்லை. இக்கிராமம் பெரும்பான்மை முஸ்லிம் மக்களைக் கொண்டிருப்பினும் அயற்கிராமங்கள் சிங்கள கிராமங்களாகவே இருக்கின்றன. இதனால் அங்கு வாழ் முஸ்லிம் சமூகம் சிங்கள சமூகத்துடன் அவ்வப்போது முறுகல் நிலைகளுக்கு உள்ளாகின்ற சூழ்நிலை இருக்கின்றது. இவ்வாறான சூழ்நிலையிருப்பினும், இதனைத் தாண்டி மக்கள் இன ஐக்கியத்தைப் பேணி வாழ்ந்துவருகின்றனர்.

இக்கிராமத்து முஸ்லிம் மக்கள் தமது பரம்பரைத் தொழிலான வர்த்தகத்தையே பாரம்பரிய தொழிலாகக் கொண்டிருக்கின்றனர். வசதி குறைந்தவர்கள் பொட்டனி வியாபாரத்தில் ஈடுபடுகின்றனர். திக்குவல்லைப்

To whom correspondence should be addressed: fathimafaseela233@gmail.com

[75] Assistant Lecturer, Department of Languages, South Eastern University of Sri Lanka.

[76] Professor, Department of Languages, South Eastern University of Sri Lanka.

பகுதியின் சமூக நடவடிக்கைகள் பெரும்பாலும் மேல்மட்ட வர்க்கத்தினரின் கைகளுக்குள்ளேயே அடங்கியிருந்தன. பள்ளி நிர்வாகிகள், ஹாஜியார்மார்கள் (முதலாளி வர்க்கத்தினர்) போன்றோர் கீழ் மட்ட வகுப்பினரை அடக்கியாண்டு வருகின்றனர். எனவே இங்கு உயர்வர்க்கம், மத்தியதர வர்க்கப் பிரிவினைகள் பெருமளவில் காணப்படுகின்றன.

திக்குவல்லைப் பிரதேச முஸ்லிம் மக்களின் வாழ்வியல் கூறுகளும் பண்பாடுகளும் தென்னிலங்கை அல்லாத ஏனைய முஸ்லிம் சமூகத்தினரின் கூறுகளிலிருந்து மிகவும் வேறுபட்டனவாக இருக்கின்றன. கந்தூரி, மௌலூது, கத்தம் தமாம், ராத்தீபு, தலைப்பாத்திஹா போன்ற பக்திபூர்வ நிகழ்வுகளும், கலை நிகழ்வுகளும் கொண்டு தம்மைத் தனித்துவமாக காட்டிக் கொள்கின்றனர். குறிப்பாக இச்சமூகப் பெண்கள் மூடநம்பிக்கையின் பால் மூழ்கியிருக்கின்றனர். இவர்களது பேச்சுவழக்கிலே சிங்கள மொழி ஆதிக்கம் செலுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இதனால் இவர்களது பேச்சுத்தமிழ் வேறுபாடு உச்சரிப்புத் தன்மையிலும்கூட ஒட்டியிருந்தது.

இத்தகு கிராமத்தல் சாதாரண குடும்பத்தில் 1950 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நான்காம் திகதி பிறந்தார் திக்குவல்லை கமால். இவரது இயற்பெயர் முகம்மது கமால். இதனையே தனது ஊர்ப்பெயருடன் இணைத்து திக்குவல்லை கமால் என்ற பெயரில் எழுதிவருகின்றார். கவிதைகள், சிறுகதைகள், நாவல்கள், வானொலி நாடகங்கள், புதினங்கள், சிறுவர் இலக்கியங்கள், மொழிபெயர்ப்புக் கட்டுரைகள், மொழிபெயர்ப்புக் கதைகள் என பல்வேறு துறைகளில் தனது இலக்கியப் பங்களிப்பினை ஆற்றிவரும் இவர் பல்துறைப் படைப்பாளியாக இருந்தபோதிலும் சிறுகதைகள் மூலமே பேர்பெற்றார்.

சிறுகதை என்பது ஏனைய இலக்கிய கலைவடிவங்களை விடவும் ஒரு நேர்த்தியான கலைவடிவமாகும். சிறுகதையில்தான் மனித உணர்வுகளை பல கோணங்களிலும் பல தோரணைகளிலும் காட்டி கலைவடிவில் படைக்க முடிகின்றது. அந்தவகையில் ஈழத்தில் 1970 களின் பின்னர் சிறுகதை எழுதத் தொடங்கியவர்களுள் திக்குவல்லை கமால் மிக முக்கியமானவர். இவர் மொத்தமாக ஒன்பது சிறுகதைத் தொகுதிகளை எழுதி வெளியிட்டுள்ளார். அவற்றுள் 'குருட்டு வெளிச்சம்' தொகுதி இலங்கை இலக்கியப் பேரவை சான்றிதழும் 'முட்டைக்கோப்பி' தொகுதி இலங்கை இலக்கியப் பேரவையின் 2010 ஆம் ஆண்டுக்கான விருதும் பெற்றுக்கொண்டது. இவரது பல சிறுகதைகள் சான்றிதழ்களையும் பரிசுகளையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பொதுவாக இலக்கியங்கள் மனித சமுதாயத்தை படம் பிடித்துக்காட்ட வல்லன. மனித வாழ்வியலை சிறப்பாக அறிந்திடச் செய்வதில் இலக்கியப் படைப்புக்கள் பெரிதும் பங்காற்றுகின்றன. அவ்வகையில் திக்குவல்லை கமாலின் சிறுகதைகள் புதிய பிரவேசத்துடன் அவரது கிராம மக்களின் வாழ்வியலை பேசுபொருளாகக் கொண்டன. கமால் தன் கதைகளில் தென்னிலங்கை முஸ்லிம் சமூகப் பிரச்சினைகளை மிக யதார்த்தபூர்வமாகச் சித்திரிக்கின்றார். வர்க்க முரண்பாடுகள், காலகாலமாக ஊறிப்போன நம்பிக்கைகள், வறுமைக் கொடுமை, பெண்கள் தொடர்பான சிக்கல்கள் என்பன அவரது கதைகளில் வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் காட்டப்படுகின்றன. இவற்றைத் தென்னிலங்கைப் பேச்சுத்தமிழிலேயே கையாளுகின்றார். இவரது சிறுகதைகள் குறித்து செ.யோகராசா பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

"நீங்கள் அறிமுகப்படுத்தும் உங்கள் கிராமம் சார்ந்த மக்கள் ஏழைகளும் உழைப்பாளர்களுமே. அன்றாட வாழ்வில் அவர்களுக்கு ஏற்படும் கஷ்டங்களும் நெருக்கடிகளும் ஏமாற்றங்களும் அவர்களது மனிதாபிமான உணர்வும் புரிந்துணர்வும் அவர்கள் சுரண்டப்படுவதும் ஏமாற்றப்படுவதுமே உங்கள் சிறுகதைகளூடாக வெளிக்கொணரப்படுகின்றன. இன்னொரு கோணத்தில் பார்ப்பின் உங்கள் சிறுகதைகள் மனித உணர்வுகளையும் ஏழை - பணக்காரன் முதலாளி – தொழிலாளி கணவன் - மனைவி, தந்தை – மகள், அவற்றினை அடிநாதமாகக் கொண்டெழும் உணர்வுகளையும் வெளிப்படுத்த முயல்கின்றன" (யோகராசா, 1993).

தென்னிலங்கை, குறிப்பிட்டுக் கூறத்தக்க சில பகுதிகளில் முஸ்லிம் மக்கள் செறிந்து வாழும் பிரதேசமாகும். இங்கு வாழும் முஸ்லிம்களின் சமூக நடத்தைகளை தீர்மானிப்பதில் சமயமே முதல்நிலை பெறுகின்றது. சமூக நடத்தைகள் பெரும்பாலும் மேல்வகுப்பினரிடையே ஆதிக்கம் பெற்றிருந்தது. கீழ்மட்ட ஜீவிகள் ஒடுக்கப்பட்டனர். இவ்வாறு சமூக நீதிகளுக்கும் அநீதிகளுக்குமிடையான சிக்கல்கள் தாராளமாக நிகழ்கின்றன.

தான் வாழ்ந்து வருகின்ற சமூகத்தின் முன்னேற்றத்தில் அக்கறை கொண்ட படைப்பாளிகள் அந்தச் சமூகத்தில் நடந்தேறும் பிரச்சினைகளை அவர் தம் இலக்கியங்களில் தத்ரூபமாகப் படைத்துக்காட்டி அவற்றுக்கான தீர்வுகளையும் முன்வைக்கின்றனர். அந்தவகையில் ஒரு முஸ்லிம் கிராம சமுதாயத்தில் புரையோடிக்கிடக்கும் சீர்கேடுகளையும் சிக்கல்களையும் தன் கதைகளில் பிணைத்துப் படைத்துள்ளார் கமால். இவரது கதைகள் முழுவதிலும் தென்னிலங்கை முஸ்லிம் சமூக உறவுகள், உணர்வுகள், சமூக அவலங்கள் முதலிய நடப்பியல் மெய்மைகளின் பிரதிபலிப்புக்களைக் காணலாம்.

தென்னிலங்கை கிராமத்தில் வாழும் மிகச்சொற்ப முஸ்லிம்களிடையே முதலாளி, ஹாஜியார், லெவ்வை போன்ற உயர்வர்க்கத்தினர் தொழிலாளிகள், கடை சிப்பந்திகள், சிற்றூழியர்கள் போன்ற கீழ் மத்தியதர வர்க்கத்தினர் என்று பிரிவினைகள் தலைவிரித்தாடுகின்றன. தலைமைத்துவங்கள், பள்ளி நிர்வாகங்கள் போன்றன வசதிபடைத்தவர்களிடமே காணப்படுகின்றன. இவர்களது ஆதிக்கம் மேலோங்கி மத்தியதர வர்க்க மக்கள் ஒடுக்கப்படுகின்றனர். உழைப்பாளிகள் பெரும்பாலும் கல்வியறிவு படைத்தவர்களாக இருப்பதில்லை. இதனால் முதலாளிமார்கள் உழைக்கும் ஏழை மக்களை ஏமாற்றிப் பிழைப்பவர்களாக இருக்கின்றனர். ஏழைகள் முதலாளிமார்களின் ஏமாற்றுத்தனங்களுக்கு உள்ளாகி தொடர்ந்தும் துன்பத்தையே அனுபவிக்கின்ற நிலை காணப்படுகின்றது.

'மாடுகள்' என்ற கதையில் வரும் முகம்மது முதலாளி மாட்டு வியாபாரியான சமீமிடம் தனக்கு அவசரமாக மூன்று மாடுகள் தேவைப்படுகிறது என்று உதவி கேட்கிறார். இதனால் தனக்கும் ஏதாவது தேடிக்கொள்ளலாம் என்று நம்பி அவன் ஏலவே ஒரு இடத்தில் பொருந்திவைத்திருந்த மாடுகளை எடுத்துத் தருவதாகக் கூறுகிறான் சமீம். மாடுகள் தேவைப்பட்ட முதலாளி அவனுடன் சாமர்த்தியமாகப் பேசி, அந்த மாடுகள் இருக்கும் இடத்தை அறிந்துகொண்டு சென்று இரவோடு இரவாக தன் ஆட்களை அனுப்பி அம்மாடுகளை கூடுதலான விலைகொடுத்து வாங்கிவிடுகிறார். இது எதுவும் அறியாத சமீம் காலையில் அங்கு போய் பார்த்தபோது தான் ஏமார்ந்துபோனதை அறிகிறான்.

"சீ.. முகம்மது முதலாளிட கெட்டத்தனம். சல்லி சம்பரிக்கோணுந்தான். அது ஒவ்வொத்தரடேம் ஓழப்பில தங்கியிருக்கு.. அடுத்தவன ஏமாத்தி பொகுத்திலடிச்சி.. சம்பாரிக்கியெண்டால்.. - அவனது உள்ளம் நியாயமான கேள்விகளைத் தனக்குள் எழுப்பி நொந்து கொண்டது" (திக்குவல்லை கமால், 1984). ஏழை உழைப்பாளிகளை வைத்து ஏமாற்றிப் பிழைக்கின்ற முதலாளி வர்க்கத்தினால் அவர்களுக்கு தொடர்ந்தும் நஷ்டமும் கஷ்டமுமே வருகின்றன. இவர்கள் ஊருக்கு வெளியே நல்லவர்களாகவும் உழைத்து வாழும் ஏழை மக்களிடம் தங்களது கேவலமான வேலைகளையும் காட்டுகின்றனர். முதலாளிமார்களின் சொகுசு வாழ்க்கைக்குப் பின்னாடி இப்படியான ஏமாற்று வேலைகள்தான் உண்டு என்பதை கமால் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றார்.

கீழ் வகுப்பு வறிய மக்கள் எப்படிப்போனாலும் பரவாயில்லை தாங்கள் மட்டும் உண்டு, உடுத்து மகிழ்ந்தால் போதும் என்ற எண்ணத்திலும் செயற்பாட்டிலும் வாழ்பவர்களே இச்சமூக உயர்தர மக்கள். முதலாளி என்ற அந்தஸ்தினை வைத்துக் கொண்டு நினைத்ததெல்லாம் சாதிக்க முனைகின்றனர். இதனை 'கதவுகள்' என்ற கதையினூடாக வெளிக்காட்டியிருப்பதைக் காணலாம்.

ஊரிலுள்ள ஒரே ஒரு சில்லறைக் கடையை நம்பி தங்கள் வருமானத்திற்கேற்ப கொஞ்சம் கொஞ்சமாக சாமான்களை வாங்கி அன்றைய பொழுதை கழிப்பவர்கள் ஏழைகள். சிலநேரம் சில பிரச்சினைகளால் உணவுச் சாமான்களுக்கு தட்டுப்பாடு நிலவுகின்ற காலம் வரும். அக்காலத்தில் வசதிபடைத்த ஹாஜியார்மார்கள் வந்து கடையிலுள்ள சாமான்களை கிலோ கணக்கில் விலைக்கு வாங்கிச்செல்வர். இதனால் வழமையான வாடிக்கையாளர்களான கூலித்தொழிலாளிகளுக்கு எதுவும் மீதமிருப்பதில்லை. இதனால் ஆத்திரமடைந்த ஏழைகள் தைரியமாக எழுந்து கடைக்காரனிடம் தட்டிக்கேட்கின்றனர்.

> “இங்க இவடத்திலீக்கிய மனிசருக்கு கொஞ்சம் கொஞ்சமா பங்கிட்டுக் குடுங்கொ.. இன்னம் மனிசரு வாரொண்டும். காரியல்ல வாரவங்களுக்கு பொட்டிக் கணக்கில கிலோக்கணக்கில மட்டும் குடுக்கவாண.”
>
> “போன பைனம் நீங்க அப்பிடித்தான் செஞ்ச.. எங்களுக்கு நக்கிக் கொண்டு சீனி கொஞ்சமாவது கெடக்கல்ல.. அன்ன செல்லல்லயென்டு செல்லவாணா”

இந்த நியாயமான மிரட்டலால் கடைக்காரனும் தன் பிழையை ஒப்புக்கொண்டு மீண்டும் வந்த பைஸர் ஹாஜியிடம் அடிபணியாது தைரியமாக பின்வருமாறு கூறுகிறான்:

> “அது செய்யேல ஹாஜி.. இப்பிடிப்பட்ட நாளக்கித்தான் நீங்களியள் வார.. இது எந்தநாளும் வாரவங்க” (திக்குவல்லை கமால், 1997).

இங்கு, முதலாளிமார்களின் சுயநலப்போக்கினால் ஏழைகளுக்கு நிகழ்கின்ற அநீதியும் அவ்வாறான முதலாளித்துவத்தை எதிர்த்து நிற்கும் தைரியம் ஏழைகளுக்கு வரவேண்டும் என்ற ஆசிரியரின் வேட்கையைக் காணலாம்.

உலகில் பெண்களின் பிரச்சினை தனியாக நோக்கப்படுகின்ற ஒன்றாகும். சமூகத்திலுள்ள பெண்கள் பல்வேறு வகைகளில் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். பெண்களின் மன உணர்வுகள், ஆசைகள், அபிப்பிராயங்கள், தேவைகள், கனவுகள் என்பன புறந்தள்ளப்பட்டு முடக்கப்படுகின்றபோது சமூகத்தில் அது பிரச்சினையாகவே நோக்கப்படுகின்றது. ஆண் பெண் என இருபாலாரையும் கொண்டு வாழும் சமூகத்தில் ஆண்களை முதன்மைப்படுத்திப் பார்ப்பவர்களே அதிகம். இங்கு பெண்களை இரண்டாந்தரமாக வைத்துப் பார்க்கின்ற நிலையே உள்ளது. இத்தகைய சூழலில்தான் பெண்கள் பல கொடுமைகளுக்கும் இன்னல்களுக்கும் உள்ளாக்கப்படுகிறார்கள். இது மட்டுமன்றி பெண்களின் வாழ்வும் சீரழிக்கப்படுகின்றன. சமூகத்தில் பெண்மைக்குரிய உணர்ச்சிகள் மதிக்கப்படாமல் இருக்கின்றன. குடும்ப வாழ்வு, கல்வி, திருமணம் என்பவற்றில் அவளது உணர்வுகளுக்கு எந்தவித மதிப்பும் இல்லாமலே போகின்றன. பெண் என்பவள் ஆண்களின் ஆசைகளுக்கும் தேவைகளுக்கும் அடங்கிப் போகக் கூடியவளாக இருக்க வேண்டியவள் என்பதுவே காலகாலமாக இருந்துவரும் சிந்தனையாகும்.

தென்னிலங்கை முஸ்லிம் சமூகத்தைப் பொறுத்தவரையில் வறுமையும் குடும்ப வாழ்வுமே பெண்களின் பிரச்சினைகளைத் தீர்மானிக்கின்றன. இவ்வாறான தமது பிரதேசப் பெண்கள் அனுபவிக்கின்ற பிரச்சினைகளை கமாலின் கதைகள் யதார்த்தபூர்வமாகச் சித்திரிக்கின்றன.

சீதனக் கொடுமையால் பெண்களின் திருமணங்கள் தடைப்படுகின்ற அவலத்தை பல கதைகளில் வெளிக்காட்டுகிறார். ‘வான் பறவைகள் மத்தியில் ஒரு மண்புழு’ இதனை என்ற கதையின் மூலம் காணலாம்.

“அவளுக்கொரு அக்கா இருக்கிறாள். அதுவும் திருமணம் ஆகாமல் இருக்கிறாளென்றால், அதற்கு அதிதீவிரச் சீதனப் பிரச்சினைதான் காரணம். பெற்றோர் அதற்காக மேற்கொள்ளும் முயற்சிகளெல்லாவற்றையும் அவள் நன்கு அறிவாள். சென்ற விடுமுறையின்போது கூட பணப்பிரச்சினை பற்றி அம்மா கதையோடு கதையாக அழாக்குறையாகச் சொன்னதை அவள் இன்றுபோல் இரைமீட்டிக்

கொண்டாள்'' (திக்குவல்லை கமால், 1984).இவ்வாறு சீதனப் பிரச்சினையால் பெண்களின் திருமணம் தடைப்படுகின்றதைக் காணலாம்.

சமூகத்தில் இருக்கும் குடும்பப் பெண்களின் துன்பகரமான வாழ்வு கமாலின் கதைகளில் மிக ஆழமாகக் காட்டப்படுகிறது. சமூகத்தில் முஸ்லிம் பெண்கள் பல்வேறு வகையான கட்டுப்பாடுகளுக்கும் மனித எண்ணப்பாடுகளுக்கும் மத்தியிலேயே வாழ வேண்டியிருக்கிறது. இதனால் இளமையிலேயே கணவனை இழந்த ஒரு பெண் மறுமணம் முடிக்க விரும்புவதைக் கூட கேவலமாகப் பார்க்கின்ற நிலையில் சமூகம் இருக்கின்றது என்பது 'விடிவு' என்ற கதையின் மூலம் கூறப்படுகின்றது.

> ''இத்தா முடிஞ்சி மூணு மாஸமாகல்ல அதுக்குள்ள ஒனக்கு மாப்பிள தேவப்பட்டா.. வெக்கமில்லயா வாயத் தொறந்து செல்லியத்துக்கு…''

இக்கதையில் தன் அக்கா – அவளின் கணவன் ஆகியோரின் சுயநலக் குறுக்கீட்டுக்குள் மாட்டிக் கொண்டு தன் சுய விருப்பத்தை அடைந்து கொள்ள முடியாமல் தவிக்கின்றவளாக பர்ஸானா எனும் பாத்திரம் படைக்கப்படுகின்றது.

> ''யாருடைய கௌரவத்தையும் குறைப்பது அவளுடைய நோக்கமாக இருக்கவில்லை. தன்னைத் தேடி வந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளவே அவள் பார்த்தாள். துன்னை இப்படி வைத்துக் கொண்டு தங்களது காரியத்தைக் கொண்டு போக தாத்தாவும் மச்சானும் திட்டமிடுவது அவளுக்குத் தெட்டத் தெளிவாக விளங்கியது'' (திக்குவல்லை கமால், 2010).

விதவைப் பெண்கள் மறுவாழ்வை நினைத்துப் பார்ப்பது கூட பாவம். இந்த மரபுவழியைப் பிடித்துக்கொண்டு பெண்களின் விருப்பங்களுக்கு அநீதியிழைக்கக் கூடிய சமூகமே இருக்கின்றது. இத்தகைய எண்ணம் கொண்டவர்களுக்கு சிறந்த பதிலை எடுத்துக்காட்டுவதாக கதையில் பர்ஸானாவின் முடிவு அமையப்பெறுகிறது.

''அதிகாலைச் சூரியன் ஊரெல்லாம் புதுச் செய்தி பரப்பிக் கொண்டு துயிலெழுந்தது. ஒரு சில நண்பர்கள் உறவினர்களோடு அடுத்த மஹல்லாவுக்குச் சென்று ஆசிபும் பர்ஸானாவும் நிகாஹ் முடித்திருந்தனர். கொஞ்ச காலம் வெளியூரிலேயே வங்குவதற்காக வாடகைக்கு வீடு எடுத்திருப்பதாகவும் கேள்வி'' (திக்குவல்லை கமால், 2010)இவ்வாறு திக்குவல்லை கமாலின் சிறுகதைள் தென்னிலங்கை முஸ்லிம் சமூக பெண்கள் பற்றிய பிரச்சினைகளை அவர்களது உணர்வுகளை தத்ரூபமாக சித்திரிக்கின்றன.

சமூகத்தில் தொன்றுதொட்டு நிலவி வரும் ஒரு நோயாகவே வறுமை காணப்பகிறது. அன்றாடத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியாமல் அவற்றைப் பெறுவதற்காக நாள்தோறும் போராடிக்கொண்டிருக்கக் கூடிய நிலையே வறுமையாகும். இவை உணவு, உடை, உறையுள் எனப் பல பரிமாணங்களைச் சார்ந்தவையாக இருக்கலாம்.

தென்னிலங்கை சமூகத்தில் முதலாளிமார்களான ஹாஜியார்மார்கள் வசதிபடைத்த வாழ்க்கையை வாழ்கின்றனர். அன்றாடக் கூலித் தொழிலாளிகள், சிற்றூழியர்கள் மிகக் கஷ்டமான வாழ்க்கையை அனுபவிக்கின்றனர். வறுமைக் கொடுமையால் இம்மக்கள் வாடுவது பற்றி கமாலின் கதைகளில் அதிகம் வெளிக்காட்டப்படுகின்றன. 'கோழிக்கறி' என்ற கதையில் தனது பிள்ளைகள் விரும்புகின்ற உணவை மாதத்தில் ஒருநாளாவது வாங்கிக் கொடுக்கக் கூட ஒரு தந்தைக்கு வழியில்லாமல் வறுமை வாட்டுகின்றது என்பது கூறப்படுகின்றது.

> ''சம்பளம் ஒன்றே எனது மாத வருமானம். ஐந்து ஜீவன்கள் வாழ வேண்டும். இதற்குள் விருப்பத்தேர்வுகளுக்கு எங்கே வழியிருக்கிறது. இறைச்சி மீனுக்காக ஒரு நாளைக்கு ஐம்பது ரூபாவுக்கு மேல் எப்படி செலவிடுவது? கோழி எடுப்பதென்றால் கொஞ்சம் கைவீசிச் சாப்பிட ஒரு கிலோவாவது எடுக்க வேண்டும். அதற்கு நூற்று இருபது ரூபா.. தலையே போவது போல... வீட்டில் ஒன்றாகக் கோழி சாப்பிட்டு மூன்று மாதங்களுக்கு மேலிருக்கும். எப்போதென்றே

ஞாபகமில்லை. மீண்டும் மீண்டும் சின்னவன் ரஹ்மத்தின் முகம் கண்களுக்குள்'' (திக்குவல்லை கமால், 1999).

இவ்வாறு விருப்பமான உணவுகளைக் கூட சாப்பிடமுடியாத நிலையில் வறுமைப் பிரச்சினை கைகோர்க்கின்றது. இதுபோன்றே 'கண்ணீரும் கதை சொல்லும்' என்ற கதையில் தினமும் பாடசாலையில் பிள்ளைகள் ஐஸ்ப்பழம் வாங்கிச் சாப்பிடும் போது ரமீஸா எனும் பிள்ளையால் மட்டும் ஒருபோதும் வாங்கிச் சாப்பிட முடியாமல் போகின்றது. இதனால் அந்த ஏழைச் சிறுமியின் மனம் பணக்காரப் பிள்ளைகளைப் பார்த்து அந்த வாழ்க்கை நமக்கு வாரதா என்று ஏங்குகின்றது. சிறுபிள்ளைகளே வறுமைப் பிடியால் அதிகம் அவலநிலைக்கு உள்ளாகின்றனர்.

மக்கள் வறுமையால் படுகின்ற பொருளாதாரச் சிக்கல் 'தடைக்கற்கள் குறுக்கிடுகையில் புதிய ஊற்றுக்கள் புஷ்பிக்கின்றன' என்ற கதையில் தெளிவாகக் காட்டப்படுகின்றது. அன்றாட செலவுகளை சரிப்படுத்திக் கொள்வதற்காக வீட்டிலிருக்கும் சிறுபிள்ளைகள் மனைவிமார்கள் என அனைவரும் சுயதொழில்களை மேற்கொள்ளவேண்டிய நிலை ஏற்படுகிறது. அதில் தடங்கல்கள் வந்தால் வருமானம் குறைந்து வறுமை தலைக்கேறிவிடும்.

> ''அவனது மனைவி சந்திக்கடை சோமசிறியை ஏற்பாடு செய்துகொண்டு சீனிக்கோவை அவித்தனுப்பி வருபவள். மேலதிகமாக இருபரு இருபத்தைந்தை மகளை வீடு வீடாக அனுப்பி விற்கவைப்பாள். தற்பொழுது வயிற்றுச் சுமை உச்சம் ஏறியிருப்பதால்... தூக்கம் விழிப்பதோ, நெருப்போடு குந்திக்கொண்டிருப்பதோ, மேலதிகமாக வேலை செய்வதோ கூடாதென்பது அக்கம்பக்க அனுபவம் வாய்ந்த பெண்களின் எச்சரிக்கை! அதனை மனதில் கொண்டு அதற்கு இடைக்கால முற்றுத்தரிப்பு வைத்ததால், நாளாந்த செலவுகளில் இருந்து வந்த வறுமையிலும் செஞ்செளிப்பு மிகவும் குறைந்து போய் விட்டது'' (திக்குவல்லை கமால், 1993).

பொருளாதார சிக்கலால் மக்கள் கஷ்டப்படுகின்ற அவலநிலை காட்டப்படுகின்றது. வருமானத்தை சரிப்படுத்தி வாழ்ந்துகொள்வதற்கு வீட்டில் கர்ப்பிணிகளும் சிறு பிள்ளைகளும் கூட தொழில்புரிய வேண்டிய நிலை சித்திரிக்கப்படுகின்றது. இவ்வாறான வறுமைப் பிரச்சினை சிலசமயங்களில் சமூக சீர்கேடுகளுக்கு இட்டுச்செல்வதையும் ஆசிரியர் தெளிவாக எடுத்துக்காட்டுகிறார்.

தென்னிலங்கை வாழ் முஸ்லிம்கள் தனித்துவமான வாழ்வியலையும் பண்பாட்டையும் கொண்டவர்கள். அவர்கள் பின்பற்றுகின்ற சமயம், மொழி, பாரம்பரியம், நம்பிக்கை, சூழல் போன்றவை பண்பாட்டில் செல்வாக்குச் செலுத்துகின்றன. வாழ்வியலும் பண்பாடும் காலப்போக்கில் மாறுபடக் கூடியவை. பெரும்பாலும் கல்வியறிவு காரணமாகவே வாழ்வியல் மாற்றம் பெறுகிறது. வாழ்வியல் மாற்றம் கண்டால் பண்பாடும் மாற்றம் பெறும்.

தென்னிலங்கை முஸ்லிம் சமூகம் சமயம் சார்ந்த சம்பிரதாயங்களையும் வாழ்வியல் சார்ந்த சம்பிரதாயங்களையும் சரிநிகராகக் கடைபிடித்து வருகின்றனர். சமயம் சார்ந்த சம்பிரதாயங்கள் இஸ்லாமிய ஷரீஆவைப் பின்பற்றி நிகழ்வன. வாழ்வியல் சார் சம்பிரதாயங்கள் இஸ்லாமிய ஷரீஆவுக்கு மாற்றமான நம்பிக்கை சார்ந்த பழக்க வழக்கங்களைப் பின்பற்றி நிகழ்வன. இவ்வடிப்படையில் இச்சமூகத்தின் பண்பாடு, வாழ்வியல் சார் பிரச்சினைகள் பற்றி கமாலின் கதைகளில் தாராளமாகப் பார்க்கப்படுகின்றன.

இஸ்லாத்தில் கணவனை இழந்த பின்னர் மனைவிமார் நான்கு மாதங்களும் பத்து நாட்களும் இத்தா எனும் துக்கம் அனுஷ்டித்தல் வேண்டும். அதன்பின்னர் அப்பெண் வேறொரு திருமணம் செய்ய முடியும். ஆனால் இச்சமூகத்தின் நிலைப்பாடு அவ்வாறு திருமணத்தை நினைப்பதும் பாவம் என்ற நம்பிக்கையில் இருக்கின்றனர். இதனை 'விடிவு' என்ற கதையில் காட்டப்படுகின்றது.

> ''ஒனக்குத் தெரீமோ தெரியா.. கானானூட்டு கைரி தாத்தா, கலியாண முடிச்சி மூணு வருஷத்தில அந்த மனிசன் மௌத்தாப்போன. எவளவு செல்லீம் அவ கேக்கல்ல.. ஒரு புள்ளயோட அவ

> பேச்சிக் கேக்காம அவ வாழ்ந்த தானே.. ம்.. ஜெமியப்பட மகள்ட மாப்பிள மூனு மாஸதேல காருக்கு முட்டி அவடத்திலே மௌத்து. அந்த பொம்புள மௌத்தாகங்காட்டீம் அதே இருப்பில இருந்த. ஒரு கலியாணம் கந்திருட்டுக்குப் பொகல்ல.. வெள்ளப் பொடவயல்லாம உடுக்கல்ல. ம்.. இப்பிடி இன்னம் எத்தினயென்டு செல்லவன்'' (திக்குவல்லை கமால், 2013).

இவ்வாறு கணவனை இழந்த ஒரு பெண்ணை இஸ்லாமிய சட்டத்தில் கூறப்படாத சில சம்பிரதாயங்களை வைத்துப் பார்க்கின்றனர். இது அவர்களின் மரபுரீதியான நம்பிக்கையாகக் கொள்ளப்பட்டாலும் இஸ்லாமிய சமயத்தில் இவ்வாறானதொரு விடயம் பேசப்படவில்லை.

இஸ்லாமிய சமயத்தில் ஆண்களுக்கும் பெண்களுக்குமான ஆடையணிகளில் சில வரையறைகள் கூறப்பட்டுகின்றன. இத்தகைய வரையறைகளை மறந்து சிலர் தங்களது ஆடைகளை அணிந்துகொண்டு திரிகின்றனர். இதனை 'நிர்வாணங்களை மறந்த உச்சந்தலை அலங்காரங்கள்' என்ற கதையில் ஆசிரியர் சித்திரிக்கின்றார்.

> ''உள்ளாடைகள் இருந்ததோ இல்லையோ, அழுக்கப்பியிருந்த கிளாஸ் நைலோன் பிடவையொன்றைச் சுற்றியிருந்த போதிலும், அப்படியே.. அதுவும் முழங்காலுக்குக் கொஞ்சம் உயரக் கிழிசலோடு.. அந்த நிலைக்குள்ளும் கஷ்டப்பட்டு ஒரு தொங்கலை இழுத்து தலையை மறைத்து, தனது இனத்தை இனங்காட்டிக்கொண்டு'' (திக்குவல்லை கமால், 1984).

இவ்வாறு இஸ்லாமிய பண்பாட்டைப் பிரதிபலித்துக் காட்டுகின்ற ஆடையணிகளிலுள்ள பிரச்சினைகளையும் கமாலின் கதைகளிலிருந்து எடுத்துநோக்க முடிகின்றன. ஒட்டுமொத்தமாகப் பார்ப்பின் கமாலின் கதைகளில் பண்பாடு, வாழ்வியல் சார்ந்த பிரச்சினைகள் யதார்த்தபூர்வமாக சித்திரிக்கப்படுகின்றன.

சமுதாய அமைப்பில் ஒரு அங்கமாக விளங்கும் குடும்பத்தில் கணவன் மனைவி, பெற்றோர் பிள்ளைகள் ஆகியவர்களுக்கிடையில் ஏற்படும் சிக்கல்கள் போன்றவை கமாலின் பல கதைகளிலும் வெளிப்படுத்தப்படுகின்றன.

தாய் தந்தை என்பவர்கள் பிள்ளைகளுக்கு நன்மையை நாடுபவர்களாக இருப்பார்கள். பிள்ளைகள் தவறுகள் செய்கின்ற வேளைகளில் அவர்களைத் திருத்தி நல்ல பல வழிகளில் நடாத்திச் செல்வார்கள். ஆனால் சமூகத்தில் சில பெற்றோர்கள் அறிவீனமான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர். இதனால் அவர்களது பிள்ளைகளின் வாழ்க்கை பாதிக்கப்படுகின்றது என்பதைக் கூட புரியாமல் இருக்கின்றனர். பெற்றோர்களின் இவ்வகையான நடத்தைகள் சில சிக்கல்களைத் தோற்றுவிக்கின்றன. இதனை 'வற்றாத ஊற்று' என்ற கதையினூடாகக் காணலாம்.

> ''ஐசும்ம தாத்தட பேத்தியப்பாரே பதினேழு வருஷத்தில கள்ளப் பாஸ்போட் சரிக்கட்டிக் கொண்டேன் டுபாய் போன. இப்ப அசடாய்ப் பெய்த்தா பத்து வருஷமா நிக்கிய தானே.... ஓன்ட பேர்வளங்க ஊட்டயாலும் கெட்டிக்கொள பல்லக் கடிச்சுக்கொண்டு நின்டிட்டு வாயே - உம்மாக்காரி ரொம்ப லேசாக சொல்லிவிட்டார்.''
>
> ''இதுக்கெல்லாம் இப்பிடி யோசிக்கத்தேவில்ல புள்ள. பாஸ்போட்டத் தேடிவெய். நாளக்கி கொணுபோரத்துக்கு முத்தாய்ப்பாக தனது முடிவைத் திணித்துவிட்டு ஜமால்நானா வெளியே பாய்ந்தார்.'' (திக்குவல்லை கமால், 1996)

இவ்வாறு தாயும் தந்தையும் தமது மகளின் விருப்பத்தைப் பார்க்காமல் அவளை வெளிநாடு அனுப்பி உழைத்து வருமாறு கட்டாயப்படுத்துகின்ற கேவலமான நிலையைப் பார்க்கலாம்.

பாடசாலைகளில் ஆசிரியர்கள், மாணவர்களுக்குக் காட்டுகின்ற பாகுபாடு பற்றி 'வரவேற்புப் பாடல்' என்ற கதையில் வெளிப்படுத்தப்படுகிறது. பாடசாலையில் நடைபெறவிருக்கும் கட்டிடத் திறப்பு விழாவில் வரவேற்புப் பாடல் இசைப்பதற்கு, தகுதியான மாணவர்களை தெரிவு செய்து தருமாறு ஆசிரியர்களிடம் அதிபர் கேட்டுக்கொள்கிறார். இந்நிகழ்ச்சிக்குத் தகுதியுள்ள மாணவர்களைத் தேடுவதை விட

அவர்களுக்குத் தேவையான பிள்ளைகளை தெரிவு செய்யவேண்டும் என்ற கொள்கையில் இருப்பவர்கள் பாடசாலையின் ஆசிரியர்கள்.

> "எல்லாரோடேம் செல்லிக் கொழப்பிக் கொண்டா எங்களுக்கு கரச்சல். பேசாம பேரியள எழுதிக் குடுக்கோம். – பொது ஒழுங்கொன்றை ரஸ்மினா டீச்சர் முன்மொழிந்தார்"
>
> "ஓ..ஓ.. இல்லாட்டி என்னப் கோடுங்கோ என்னப் கோடுங்கோன்டு புள்ளயல் கரச்சல் தாரொன்டும். - இலமுன்நிஸா வழிமொழிந்தார்."
>
> ஆ.. எங்கட தங்கச்சீட மகள் ஒங்கட வகுப்பேன். அதுதான் கொஞ்சம் நெனவுட்ட வந்த. – என்றார் பேகம் டீச்சர்."

"எனக்கென்டா ஒரு பிரச்சினேமில்ல. ரஹீமா டீச்சர்டேம் நஸீறா டீச்சர்டேம் இஸ்திகார் ஸேரடேம் புள்ளயளப் போட்டுட்ட…." (திக்குவல்லை கமால், 2013)

மாணவர்களுக்கு சிறந்த வழிகாட்டியாக இருக்கவேண்டிய ஆசிரியர்கள் இவ்வாறு நடந்துகொள்வதால் தகுதியுள்ள மாணவர்களின் திறமைகள் மறைக்கப்படுகின்றன. தகுதியில்லாத மாணவர்களைக் கொண்டு நடாத்தும் நிகழ்வுகளும் பூரணத்துவமடைய மாட்டாது என்பது இங்கு புலப்படுத்தப்படுகின்றது.

'பயணம்' என்ற கதையின் மூலம் சமூக நோக்குடன் செயற்படும் ஒரு ஆசிரியரின் போக்கை ஊர்த்தலைவர்கள் எதிர்த்து நிற்பதை தத்ரூபமாக சித்திரிக்கப்படுகின்றது. சமூகத்தில் படிக்கின்ற மாணவர்களின் முன்னேற்றத்தைக் கருதி நற்சேவை புரிகின்றவர்களை பிழையான கண்ணோட்டத்துடன் நோக்குகின்றனர். புதியதொரு பாதையில் ஏழைப் மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் மாற்றத்தை ஏற்படுத்த நினைக்கும்போது போலித்தலைவர்களின் குறுக்கீடுகள் நிகழ்கின்றன. புகழாரம் தங்களுக்கு மட்டும் கிடைக்க வேண்டும் என்று எண்ணுகின்ற சமூகப்போலிகள் சமூக அக்கறை கொண்ட மனிதர்களுக்கு அநியாயம் இழைக்கின்றனர். இவ்வாறான செயல்களினால் நன்றாகப் படிக்கின்ற மாணவர்களின் எதிர்காலம் பாதிக்கப்படுகின்றது.

இவ்வாறு, இவரது கதைகளில் வர்க்க முரண்பாடுகள், பெண்களுடைய பிரச்சினைகள், வறுமைச் சூழ்நிலை, சமூகப்போலிகள், இனக்கசிவுகள், குடும்பப் பிரச்சினைகள் போன்ற சமூக அவலங்கள் வெளிக்காட்டப்படுகின்றன.

**1. இலக்கிய மீளாய்வு**

திக்குவல்லை கமாலின் சிறுகதைகள் தொடர்பாகப் பல்வேறு நூல்களும் கட்டுரைகளும் ஆய்வுகளும் வெளிவந்துள்ளன.

முகம்மது சமீம் தனது 'விமர்சனக் கட்டுரைகள்' (1999) எனும் நூலில் திக்குவல்லை கமாலின் குருட்டு வெளிச்சம் சிறுகதைத் தொகுதியை ஆராய்ந்து 'திக்குவல்லை கமாலின் குருட்டு வெளிச்சம்' என்ற விமர்சனக் கட்டுரையை எழுதினார். இந்நூலில் குருட்டு வெளிச்சம் தொகுதியிலுள்ள கதைகளின் கருத்தியல்கள், பேசுபொருள்கள் என்பனவற்றை தனித்தனியாக விமர்சனம் செய்கிறார்.

சி. மௌனகுரு, மௌ. சித்திரலேகா, எம். ஏ. நு.ஃமான் ஆகியோர் இணைந்து எழுதிய இருபதாம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ் இலக்கியம் என்ற நூலில் திக்குவல்லை கமாலின் சிறுகதைகள் குறித்து ஓரளவாகப் பேசப்பட்டுள்ளது. இதில் '….தென்னிலங்கை முஸ்லிம்களின் வாழ்வும் பேச்சுவழக்கும் இக்காலப் பகுதியிலேயே சிறுகதையில் இடம்பெறத் தொடங்கின. திக்குவல்லை கமால் போன்றோரின் சிறுகதைகள் மூலம் ஒரு புதிய வாழ்க்கைப்புலம் இலக்கிய உலகுக்கு அறிமுகமாகியது.' எனக் குறிப்பிடப்படுகிறது.

க. குணராசாவின் ஈழத்துத் தமிழ்ச் சிறுகதை வரலாறு என்ற நூலில் திக்குவல்லை கமாலின் சிறுகதை எழுத்துக்கள் பற்றி பின்வருமாறு கூறப்படுகிறது.

“திக்குவல்லை கமாலின் சமீபகாலப் படைப்புகள் ஈழத்துச் சிறுகதை இலக்கியத்துக்குப் பங்களிப்புச் செய்துள்ளன. தென்னிலங்கை முஸ்லிம் மக்களின் வாழ்க்கை அனுபவங்களையும் பிரச்சினைகளையும் சமூக மெய்மைகளோடும் மண்வாசணையோடும் திக்குவல்லை கமாலினால் தன் சிறுகதைகளில் சித்திரிக்க முடிகிறது. கிராமத்துப் பேச்சுமொழியை மிக இயல்பாக அவர் தன் படைப்புகளில் கையாண்டுள்ளார்.”

மல்லிகை(மே 2004) இதழில் வெளிவந்த லெ. முருகபூபதியின் ‘திக்குவல்லை ஆத்மாவை பதிவுசெய்த படைப்பாளி’ எனும் கட்டுரையில் திக்குவல்லை கமால் பற்றியும் அவரது படைப்புகளின் உள்ளடக்கங்கள் குறித்தும் எழுதியுள்ளார். குறிப்பாக இக்கட்டுரையில் கமாலின் படைப்புகள் ஆய்வு செய்யப்படவேண்டியவை எனக் குறிப்பிடப்படுகிறது.

ஞானம்(நவம்பர் 2010) இதழில் வெளிவந்த சி. ரவீந்திரனின் ‘ஈழத்து இலக்கியத்தின் பல்துறைசார் படைப்பாளி திக்குவல்லை கமால்’ எனும் கட்டுரையில், ‘….இவரது கதைகள் மக்களின் பிரச்சினைகளை நாசூக்காக வெளிக்காட்டும் திறன் கொண்டவை எனக் குறிப்பிடுகிறார்.

ஞானம்(ஜனவரி 2002 ) இதழில் வெளியாகிய ந. பார்த்திபனின் ‘இலக்கியப் பணியில் இவர் - திக்குவல்லை கமால்’ எனும் கட்டுரையில், கமால் தனது திக்குவல்லை கிராமத்தின் வாழ்நிலையை அங்கு வாழும் மக்களின் பேச்சு மொழியில் - சமய - கலாசார பகைப்புலத்தில் எழுதியுள்ளமையைக் குறிப்பிடுகிறார்.

திக்குவல்லை கமாலின் ‘கோடையும் வரம்புகளை உடைக்கும்’ (1984) எனும் சிறுகதைத் தொகுதிக்கு திக்குவல்லை ஷம்ஸினால் ஆய்வுபூர்வமான நீண்டதொரு முன்னுரை வழங்கப்பட்டுள்ளது. இம்முன்னுரையில் தென்னிலங்கை முஸ்லிம்கள் பற்றிய செம்மையான அறிமுகத்தோடு கமாலின் சிறுகதைகள் குறித்தும் பேசப்படுகிறது. இதில் ‘கமாலின் கதைகள் பரந்துபட்ட உலகப் பிரச்சினையின் அடி ஆழத்தைத் தொடுகின்றவை. ….’ எனக் குறிப்பிடப்படுகிறது.

கோடையும் வரம்புகளை உடைக்கும் சிறுகதைத் தொகுதியைப் பதிப்பித்து வெளியிட்ட பதிப்பகத்தாரின் பதிப்புரையில் கமாலின் கதைகள் பற்றிக் கூறும்போது, ‘உயர்ந்த மனிதாபிமானத்துடனும் தெளிவான சமூகக் கடமையுடனும் ஆக்கப்பட்டுள்ள இக்கதைகள் உண்மையும் எளிமையும் கலைநயமும் மிக்கவை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கமாலின் குருட்டு வெளிச்சம் தொகுதிக்கு செ. யோகராசா விமர்சன உரையொன்றை வழங்கியுள்ளார். இவ்வுரையில் கமாலின் கதைகளை ஆராய்ந்து இக்கதைகளில் தென்னிலங்கை கிராமமொன்றின் இதயத் துடிப்பு கேட்கிறது, மணம் வீசுகிறது என்றும் கிராமத்து மக்களின் பேச்சுமொழியை லாவகமாக கையான்டுள்ளீர்கள் என்றும் குறிப்பிடுகிறார்.

இவ்வாறு திக்குவல்லை கமாலின் சிறுகதைகளில் அவரது கிராமம் சார்ந்த விடயங்கள் பேசப்பட்டுள்ளன என்பது பல்வேறு கட்டுரைகளிலும் விமர்சனங்களிலும் வெளிவந்திருப்பினும் ‘திக்குவல்லை கமாலின் சிறுகதைகளும் தென்னிலங்கை முஸ்லிம் சமூகமும்’ எனும் தலைப்பில் இதுவரை எவ்வித ஆய்வுக் கட்டுரைகளும் வெளிவரவில்லை. எனினும் கமாலின் ஆறு சிறுகதைத் தொகுப்புகளை அடிப்படையாகக் கொண்டு பேராதனைப் பல்கலைக்கழகத்தில் றிம்ஸா எனும் மாணவி தமிழ் சிறப்புக் கலைமாணிப்

பரீட்சையின் ஒரு பகுதித் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் சமர்ப்பித்த (2004.ʹ.2005) ஆய்வுக் கட்டுரை ‘திக்குவல்லை கமாலின் சிறுகதைகளில் சமுதாயச் சிக்கல்கள்’ எனும் தலைப்பில் அமைகின்றது. ஐந்து இயல்களாகப் பிரிக்கப்படுகின்ற இவ்வாய்வின் முதலாவது இயலில் சிறுகதை இலக்கியமும் ஈழத்தில் அதன் தோற்றமும் வளர்ச்சியும் பற்றிப் பேசப்படுகிறது. திக்குவல்லை கமாலின் வாழ்க்கைப் பின்னனியும் இலக்கிய முயற்சிகளும் எனும் தலைப்பில் இரண்டாவது இயல் அமைகின்றது. மூன்றாவது இயல் திக்குவல்லை கமாலின் சிறுகதைகளில் வர்க்கப்பாகுபாடும் அதனால் ஏற்படும் பிரச்சினைகளும் என்ற தலைப்பில் ஆராயப்படுகின்றது. திக்குவல்லை கமாலின் சிறுகதைகளில் பெண்ணும் பெண்ணியமும் என்ற தலைப்பில் நான்காவது இயல் அமைகிறது. இறுதி இயல் திக்குவல்லை கமாலின் சிறுகதைகளில் ஏனைய சமுதாய சிக்கல்கள் என்ற தலைப்பில் ஆராயப்படுகிறது.

ஆகவே, அவ்வாய்வின் பின்னர் வெளியிடப்பட்ட திக்குவல்லை கமாலின் மேலதிக மூன்று சிறுகதைத் தொகுதிகளையும் சேர்த்து இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வு கமாலின் கதைகளில் தென்னிலங்கை முஸ்லிம் சமூகப் பிரச்சினைகள் சித்திரிக்கப்படுகின்றன என்பதை எடுத்துக்காட்டி பூரணப்படுத்தப்பட்ட ஆய்வொன்றாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 2. ஆய்வு முறையியலும் தரவு சேகரிப்பும்

இவ்வாய்வினை சிறந்த முறையில் செய்துமுடிப்பதற்காக முதலாம் நிலைத்தரவுகளும், இரண்டாம் நிலைத்தரவுகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன. முதலாம் நிலைத்தரவுகளாக திக்குவல்லை கமாலின் ஒன்பது சிறுகதைத் தொகுதிகளும் அவருடனான நேர்காணலும் பயன்படுத்தப்பட்டுள்ளன.
இரண்டாம் நிலைத்தரவுகளாக திக்குவல்லை கமாலின் இலக்கியங்கள் தொடர்பாக எழுதப்பட்ட முன்னைய ஆய்வுகள், கட்டுரைகள், விமர்சனங்கள், முன்னுரைகள் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன.

## 3. கலந்துரையாடலும் முடிவுரையும்

சமூகத்தைப் பிரதிபலித்துக்காட்டுவதில் இலக்கியங்களின் பங்களிப்பு கணதியானவை. ஒரு படைப்பாளி தன்னைச் சுற்றி நடக்கின்ற நிகழ்ச்சிகளைக் கதைப்படுத்துகின்றான். அந்தவகையில் திக்குவல்லை கமாலின் படைப்புகளில் அவரது கிராமம் சார்ந்த மக்களின் ஒட்டுமொத்த வாழ்வியல் நிலைகளும் காட்டப்படுகின்றன. முக்கிய பிரச்சினையாக வர்க்க முரண்பாடு காட்டப்படுகின்றது. சமூகத்தில் வசதிபடைத்தவர்கள் தங்களின் வளமான வாழ்வை மெருகூட்டிக்கொள்வதற்காக ஏழை மக்களை பலிகேடாக்குகின்றனர். வெளியில் நல்லவர்களாக வேசம்போட்டுக்கொண்டு திரிகின்ற முதலாளிமார்கள் ஏழைகளை ஏமாற்றிப் பிழைக்கக்கூடியவர்களாகவே இருக்கின்றனர். இவ்வாறான சிக்கல்களும் அவற்றுக்கு ஏழைகள் தாழ்ந்து போகாது முதலாளித்துவத்திற்கு எதிராகப் போராடவேண்டும் என்ற சிந்தனையுமே கமாலின் கதைகளினூடாகக் காட்டப்படுகின்றன. ஏற்றத்தாழ்வுகளற்ற சிறந்த சமத்துவ சமூகமொன்று கட்டியெழுப்பப்படவேண்டும் என்பதே கமாலின் வேட்கையாக இருக்கின்றது.

மேலும், கமாலின் கதைகளில் பெண்கள் எதிர்கொள்கின்ற முதன்மைப் பிரச்சினையாக குடும்பப் பிரச்சினைகளே எடுத்துக்காட்டப்படுகின்றன. ஆணாதிக்கப் போக்கினால் பெண்கள் மனரீதியாகப் பாதிக்கப்படுகின்ற நிலை வெளிக்காட்டப்படுகின்றது. காலகாலமாக பெண்கள் அனுபவிக்கின்ற பிரச்சினையாக சீதனக் கொடுமை மிக யதார்த்தத் தன்மையோடு காட்டப்படுகின்றது.
வறுமையினால் மக்கள் படுகின்ற வாழ்க்கைப் பிரச்சினையையும் கமால் தன் கதைகளில் கூறத்தவறவில்லை. வறுமையின் காரணமாக மக்கள் ஒரு பொழுதைக் கழிக்கக்கூட கஷ்டப்படுகின்ற நிலையிருக்கின்றது. சமூகத்தில் மக்களுக்கு அநீதி இழைக்கப்படுவதற்கான காரணியாக இருப்பதும் வறுமைதான் என்பதை கமால் தெளிவாகக் காட்டுகிறார்.

தென்னிலங்கை முஸ்லிம் மக்கள் சடங்குகள் சம்பிரதாயங்கள் என்பவற்றை நம்பிக்கையாகக் கருதுகின்றனர். அர்த்தமற்ற வழிகளை ஆதாரமாகக்கொண்டு இஸ்லாமிய சட்டத்தில் சொல்லப்படாத

விடயங்கள் பலவற்றையும் நம்பிக்கை என்ற பெயரில் மேற்கொள்கின்றனர். இதனால், இம்மக்கள் தமது பண்பாட்டை இழக்கின்ற நிலைமைக்குத் தள்ளப்படுகின்றனர்.

மேலும், கமால் தன் கதைகளினூடாக சமூகத்தில் மலிந்து கிடக்கின்ற போலியான ஊர்த்தலைவர்களின் உண்மை முகங்களை வெளிச்சம்போட்டுக் காட்டுகிறார். சமூக நலன்களுக்காக தலைமைத்துவம் ஏற்றிருக்கின்ற ஊர்த்தலைவர்கள் சமூக முன்னேற்றத்திற்கு தடையாகவே இருக்கின்றனர் என்பது தெளிவாகின்றது.

தொகுத்து நோக்கும்போது, தன் சமூக மக்கள் மீது அக்கறைகொண்ட திக்குவல்லை கமாலின் சிறுகதைகளில் வர்க்க முரண்பாடுகள், பெண்கள் சார்ந்த சிக்கல்கள், வறுமைப் பிரச்சினைகள், பண்பாட்டுப் பிரச்சினைகள் என்பன மிகையாக எடுத்துக்காட்டப்படுகின்றன. இத்தகைய பிரச்சினைகளுக்கான தீர்வுகளை மறைமுகமாகவும் வெளிப்படையாகவும் தன் கதைகளில் வெளிப்படுத்தியுள்ளார் கமால். கருத்திற் செம்மையும் நடையில் நேர்த்தியும் கொண்ட கமாலின் கதைகள் படிப்போர் மனதில் சமுதாய அக்கறையைத் தோற்றுவிக்கின்றன. அவ்வாறே சிறந்ததொரு சமூகத்தைக் கட்டியெழுப்பும் பணியை செவ்வனே நிறைவேற்றுகின்றன.

மொத்தத்தில் தென்னிலங்கை முஸ்லிம்களின் பிரச்சினைகளை வெளிக்கொணர்வதில் திக்குவல்லை கமாலின் சிறுகதைகளுக்கு முக்கிய இடமுண்டு.

**உசாத்துணைகள்**

திக்குவல்லை கமால், (1984). கோடையும் வரம்புகளை உடைக்கும், பக்.28,85,98
திக்குவல்லை கமால், (1993). குருட்டு வெளிச்சம், ப.28
திக்குவல்லை கமால், (1996). விடுதலை, ப.73
திக்குவல்லை கமால், (1997). புதியபாதை, ப.49
திக்குவல்லை கமால், (1999). வரண்டுபோன மேகங்கள், ப.36
திக்குவல்லை கமால், (2013). கனவுத் தாரகை, பக்.61-62,67
யோகராசா, செ. (1993). குருட்டு வெளிச்சம், பக்.5-6
முருகபூபதி, லெ. (2004) மல்லிகை, பக்.5-6
நேர்காணல் - திக்குவல்லை கமால், 2016.11.09